**தேசிய கல்வி நிறுவகம்**
**ஆசிரியர் கல்வித் துறை**
**கல்வி இளமாணி சிறப்புக் கற்கைநெறி 2025**

# BEd (Hons) Degree Programme

## SLQF Level 6

**கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரல்**
**(தமிழ் மொழி மூலம்)**

தேசிய கல்வி நிறுவகத்தால் முன்னெடுக்கப்படுகின்ற மேற்படி கல்வி இளமாணி சிறப்புக் கற்கை நெறிக்காக தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. கற்கைநெறியின் இயல்பு**

1.1 கல்வி இளமாணி சிறப்புப் பட்டக் கற்கை நெறி 120 திறமை மட்டங்களைக் (credits) கொண்டது. தேசிய கல்வியியல் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு 60 திறமை மட்டங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளது.

1.2 இக்கற்கைநெறி வார இறுதி மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் நடத்தப்படும் பகுதி நேர கற்கை நெறியாகும். அத்துடன் நிகழ்நிலை மற்றும் நேரடி வகுப்பு அமர்வுகள் மூலமாக கல்விசார் நடவடிக்கைகள் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் பிராந்திய கற்கை நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும்.

1.3 தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் இக்கற்கை நெறி நடாத்தப்படும், அத்துடன் ஆங்கில மொழியை பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில பாட நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும் ஆங்கில மொழி கற்கை நெறி ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும்.

**02. விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

2.1 தேசிய கல்வியல் கல்லூரிகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். அத்துடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

2.2 **2024.12.10** தினத்தன்று இலங்கை ஆசிரியர் சேவை / இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை / இலங்கை அதிபர் சேவை/ இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை / இலங்கை கல்வி நிர்வாக சேவை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்று தற்போது சேவையாற்றுபவராக இருத்தல்.

**03. விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்தல்**

3.1 நேர்முகத் தேர்வு அடிப்படையில் விண்ணப்பதாரிகள் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். இதன் போது சேவை காலம் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

3.2 குறித்த ஒரு கற்கைநெறி ஒரு பிராந்திய மத்திய நிலையத்தில் ஆகக்குறைந்தது 50 விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் தேசிய கல்வி நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படும் மத்திய நிலையங்களில் மட்டும் குறித்த கற்கைநெறி முன்னெடுக்கப்படும். (இது தொடர்பான இறுதி தீர்மானம் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்)

**04. கற்கை நெறிகளும் அவை நடாத்தப்படும் பிரதேச கற்கை நிலையங்களும்**

| இல. | கற்கைநெறிகள் | நிலையங்கள் |
|---|---|---|
| 1 | விஞ்ஞானத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், கொட்டகலை |
| 2 | கணிதத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், கொட்டகலை |
| 3 | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 4 | விவசாயத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கண்டி |
| 5 | மனைப்பொருளியலில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 6 | ஆரம்பக்கல்வியில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு,மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, பதுளை, இரத்தினப்புரி, கண்டி, கொட்டகலை, நுவரஎலியா |
| 7 | சமூக விஞ்ஞானத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு,மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, பதுளை, இரத்தினப்புரி, கண்டி, கொட்டகலை, நுவரஎலியா |
| 8 | வர்த்தகத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 9 | சுகாதாரமும் உடற்கல்வியில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 10 | விசேட தேவைக் கல்வியில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 11 | இரண்டாம் மொழி சிங்களத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 12 | கர்நாடக சங்கீதத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 13 | பரத நாட்டியத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 14 | சித்திரத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 15 | முதல்மொழி தமிழில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு |
| 16 | இந்து சமயத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 17 | இஸ்லாம் சமயத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 18 | கிறிஸ்தவ சமயத்தில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |
| 19 | இரண்டாம் மொழி தமிழில் சிறப்பு கல்வி இளமாணிப்பட்டம் | கொழும்பு |

05. **கற்கைநெறிக்குரிய கட்டணங்கள்**

| | |
|---|---|
| விண்ணப்ப கட்டணம் | ரூபா 1,500 |
| பதிவுக்கட்டணம் | ரூபா 2,000 |
| ஒரு பருவத்திற்கு ரூபா 50,000 வீதம் 4 பருவத்திற்குமான கட்டணம் | ரூபா 200,000 |

கற்கைநெறிக்கான முழுகட்டணத்தொகை நான்கு சமமான தொகைகளில் தவணைகளில் செலுத்த முடியும். சகல பருவங்களின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கான கட்டணம் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது செலுத்தப்படுதல் வேண்டும்.

தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியோடு கட்டணங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு தேசிய கல்வி நிறுவகத்திற்கு அதிகாரம் உண்டு.

**06. விண்ணப்பிக்கும் முறை**

6.1 தேசிய கல்வி நிறுவகத்தில், ஆசிரிய கல்வி துறையின் அதிகார பூர்வ இணைய தளத்தில் **www.teachereducation.lk** கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

6.2 மேற்குறிப்பிட்ட ஆசிரியர் கல்வித்துறையின் இணையதளத்தில் பிரவேசித்து அதிலுள்ள விண்ணப்பபடிவத்திற்கான கூகுள் படிவத்தினை (Google Form) பூரணப்படுத்துவதனூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

6.3 கூகுள் படிவத்தினூடாக விண்ணப்பித்த பின்னர் உங்கள் Email முகவரிக்கு விண்ணப்பத்தின் பிரதி ஒன்று கிடைக்கப்பெறும். அதனை Print செய்து உங்கள் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர் அனுமதியுடன் விண்ணப்பக் கட்டணம் ரூபாய் 1,500/= செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதியையும் இணைத்து நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கும் போது ஒப்படைக்கவும்.

**07. விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை**

இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் விண்ணப்பக் கட்டணம் ரூபாய் 1500/= ஐ **BE25A00000A1** எனும் கொடுப்பனவு விபர இலக்கத்தினைக் (Payment Reference Number) குறிப்பிட்டு தேசிய கல்வி நிறுவகத்தின் விசேட வைப்புச் சீட்டை மாத்திரம் பயன்படுத்தி (இது BOC இல் கிடைக்கக் கூடியதாக இருக்கும்) பணத்தினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.

**08. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு**

உங்கள் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் மின்னஞ்சல் (Email) மூலமாக மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.

**09. மேலதிக விபரங்களுக்கு**

அலுவலக நேரத்தில் பிற்பகல் 02.00 மணி முதல் 04.00 மணி வரை 0117 601733/ 0117 601737/ 0117 601741 ஆகிய இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.12.10**

கலாநிதி பிரசாத் சேதுங்க
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்